## சயரோகம் உலக அவசர தடுப்புத்திட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எபபொழுது நீங்கள் அபாயத்தில் இருக்கிறீர்கள்:

- சயரோகத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு சமீபமாக நீங்கள் இருக்கையில்.
  உதா: பாடசாலை, வீடு, வேலைத்தளம்.
- சயரோகம் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள நாடடிலிருந்து வந்தாலோ அல்லது அந்நாட்டுக்கு நீங்கள் சென்று வந்திருந்தால்.

கீழ்க்காணும் சில நாடுகளில் சயரோகம் அதிகளவில் காணப்படுகிறது.

Tuberculosis hot spots




Source World Health Organization — Associated Press

- நோய் எதிர்ப்புச்சக்தி உங்கள் உடலில் குறைவாக இருக்கும் பட்சத்தில்.
  உதா: நீரழிவு நோய், உடல் நிறை குறைவு, புற்றுநோய், சிறு நீரக பிரச்சினை போன்றவை.
- கடந்த காலங்களில், தாக்கமற்ற சயரோக கிருமிகள் உங்கள் சுவாசக் குழாயில் காணப்பட்டு அதற்குரிய சிகிச்சை அளிக்கப்படாமலிருந்தால்.
- நீங்கள் ஊட்டச்சத்துள்ள உணவுப்பற்றாக்குறைவினால் நலிந்து காணப்பட்டால் அல்லது மதுபானம், போதையூசி போன்ற வேறு குறைபாடுகளினால் பாதிக்கப்பட்டிருந்தால்.

**சயரோகப் பரிசோதனைக்கு உங்கள் வைத்தியரை சந்திக்கவும்**

## சயரோகம்

✓ தடுக்கப்படக்கூடியது

✓ சிகிச்சையளிக்கப்படக்கூடி யது

✓ குணப்படுத்தக்கூடியது

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய இல:

905-799-7700.
peelregion.ca/health
peel-stoptb.ca

B-07-046 06/09 Tamil

# சயரோகத்தை தடுக்கவும்

## சயரோகம்

சயரோகம் பொதுவாக சுவாசக்குழாயைப்பாதிக்கும் ஒரு தொற்று நோயானாலும், சில வேளைகளில் உடலின் வேறு பகுதிகளிலும் இது பாதிப்பை ஏற்படுத்தும்.

சயரோகத்தினால் நோய்வாய்ப்பட்டவர் இருமிய காற்றை வேறு ஒருவர் சுவாசிக்கும்போது இந்நோய் அவரைத் தொற்றுவதற்கு வழியுண்டு.

சயரோக கிருமிகள் உங்களைத் தொற்றிக்கொண்டால் நீங்கள் சயரோக நோயாளியாகும் அபாயம் ஏற்படலாம்.

Region of Peel
Working for you

## தடுக்கப்படக்கூடியது

உங்களுக்கு சயரோய அபாயம் என்று நீங்கள் எண்ணினால்::

உங்கள் குடும்ப வைத்தியரிடம் தோலினூடாக செய்யும் கயரோக பரீடசையை மேற்கொள்ளவும். கிருமி உறுதி என்று காணும் பட்சத்தில் நீங்கள் சயரோகத்தினால் பாதிக்கப்படடிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.



உங்கள் வைத்தியர் சயரோக நோயிலிருந்து உங்களைப்-பாதுகாக்க தடுப்பு மருந்துக்கு சிபாரிசு செய்வார். இது தடுப்பு சிகிச்சை எனப்படும். பீல் சுகாதார நிலையம் இதற்கான இலவச மருந்துகளை விநியோகம் செய்கிறது.

உங்கள் உடலிலுள்ள சயரோக கிருமிகளை அழிப்பதந்காக தடுப்பு சிகிச்சையை மருந்துகளை 6 முதல் 12 மாதங்கள் வரை உட்கொள்ள வேண்டும்.

## உங்கள் வைத்தியரை சந்திக்கவும்

## சிகிச்சையளிக்கப்படக்கூடியது



சயரோகத்தினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது பின்வரும் அறிகுறிகள் தென்படலாம்:

- பலவீனம்
- காய்ச்சல்
- நிறை குறைதல்
- இரவில் வியர்த்தல்
- பசி இன்மை

மேற்கூறப்பட்ட அறிகுறிகளுடன் சயரோகம் உங்கள் சுவாசப் பையைப் பாதித்திருந்தால்:

- இரண்டு வாரங்கள் அல்லது அதற்கு மேலாகவோ தொடர்ச்சியான இருமல்
- சளியுடன் கூடிய இருமல்
- இருமும்போது இரத்தம் வருதல்
- இருமும்போது நெஞ்சு வலி ஏற்படல்

## உங்கள் வைத்தியரை சந்திக்கவும்

## குணப்படுத்தக்கூடியது

மருந்து
Peel சுகாதார
திணைக்களத்தினால்
அளிக்கப்படுகிறது




| | Sun | Mon | Tues | Wed | Thur | Fri | Sat |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| | 28 | 29 | 30 | 31 | | | |

சயரோக சிகிச்சை மருந்து 6 முதல் 12 மாதங்கள் வரை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## சயரோக கிருமிகள் வலிமையானவை

உங்கள் வைத்தியர் நிறுத்தச்சொல்லும் வரை மருந்தை தொடர்ந்து தினமும் உட்கொள்ள வேண்டும். இல்லா விடில் சயரோகம் மறுபடியும் தாக்கும் அபாயம் வரும்.

## சயரோகம் குணப்படுத்தக்கூடியது